DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure
**IN THE COURT OF SESSIONS JUDGE,**
**NAGAPATTINAM.**
**Sessions Case No. 55/2015**

**Deposition of Witness for Prosecution : P.W. 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோவிந்தராஜ் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 18.08.2023

**முதல் விசாரணை**

நான் தென்னம்புலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். இறந்துபோனவ தியாகராஜனை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளில் ராஜசிம்மனை மட்டும் தெரியும். மற்றவர்களை தெரியாது. தியாகராஜன் இறந்துகிடந்த இடத்தை நான் பார்த்தேனா என்றால் இல்லை. காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தில் ஏதேனும் கைப்பற்றி அதில் என்னிடம் கையொப்பம் வாங்கினாரா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்யவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றாலும், 16.02.2007-ம் தேதி இரவு 09.30 மணிக்கு கரியாப்பட்டினம் காவல் ஆய்வாளர் என்னையும், பழனி மகன் ஜகநாதனையும் சாட்சியமாக வைத்துகொண்டு சம்பவம் நடந்த இடத்தை பார்த்து ஒரு பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும், அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றும், அதுபோல் அதே தேதியில் 10.30 மணிக்கு சம்பவ இடத்திலிருந்து ரத்தம் தோய்ந்த மண் சிறிதளவும், ரத்தம் தோயாத மண்

சிறிதளவும் ரத்தம் தோய்ந்த நெல்தாள் சிறிதளவும், ரத்தம் தோயாத நெல்தாள் சிறிதளவும் எடுத்தார்கள் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜரிலும் நான் கையொப்பம் செய்துவிட்டு, என்னை ஆய்வாளர் விசாரிக்கும்போது மேற்படி தகவல்களை சொல்லிவிட்டு எதிரிகளை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக பார்வை மகஜரிலும், கைப்பற்றுதல் மகஜரிலும் கையொப்பம் செய்யவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)

இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE, NAGAPATTINAM.**

**Sessions Case No. 55/2015**

**Deposition of Witness for Prosecution : P.W. 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணமூர்த்தி | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 18.08.2023

**முதல் விசாரணை**

நான் தென்னம்புலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். இறந்த தியாகராஜனை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளில் ராஜசிம்மனை மட்டும் தெரியும், மற்றவர்களை தெரியாது. இறந்து போனவர் எப்போது இறந்தார் அதுபற்றி எனக்கு சரியாக ஞாபகமில்லை, அப்போது நான் வெளிநாட்டில் இருந்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்யவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றாலும், அவ்வாறு விசாரிக்கும்போது கடந்த 16.02.2007-ம் தேதி இரவு என் வீட்டில் இருந்தேன் என்றும், அப்போது இரவு 07.00 மணிக்கு தியாகராஜன் வீட்டின் முன்பு ரோட்டில் 3 கார் நின்றது என்றும், நான் யாராவது கட்சிகாரர்கள் வந்திருப்பார்கள் என்று இருந்தேன் என்றும், பிறகு தியாகராஜன் வீட்டின் தியாகராஜன் மனைவி வசந்தா அவர் மகன் அஜய் கணேஷ், அவர் அம்மா வள்ளி அலறல் சத்தம் போட்டார்கள் என்றும், நான் சத்தம் கேட்டு அவர்கள் வீட்டு வாசல் வழியாக போனேன் என்றும், அப்போது அங்கு நின்ற 3 கார்களில் கையில் அரிவாள், கத்திகளுடன் எனக்கு தெரிந்த தென்னம்புலம்

கலை நகரில் வசிக்கும் ராஜசிம்மன், சுந்தர், செல்வம், அய்யப்பன், மொட்டபிள்ளை என்கிற சக்திதாசன், பாபு மற்றும் வாய்மேடு கண்ணன், பஞ்சநதிக்குளம் ஆனந்த், கத்திரிபுலம் கார்த்திக், கரியாப்பட்டினம் வீர எழிலன், தகட்டூர் சுந்தர், விளக்குடி சக்கரவர்த்தி ஆகியோர் அந்த காரில் வேகமாக ஏறிப் போய் விட்டார்கள் என்றும், பின்பு தியாகராஜன் வீட்டின் கொல்லைபக்கம் போய் கை லைட் வெளிச்சத்தில் பார்த்தபோது, தியாகராஜனின் மனைவி வசந்தா, அஜய் கணேஷ், வள்ளி ஆகியோர் அழுது கொண்டு இருந்தார்கள் என்றும், என்னை பார்த்தபடி அவர்கள் ராஜசிம்மன் மற்றும் அவர்களுடன் வந்த ஆட்கள் பெயர்களை சொல்லி தனது கணவரை வெட்டி கொலை செய்துவிட்டு, அரிவாள் கத்திகளுடன் ஓடிவிட்டார்கள் என்றும், நான் பார்க்கும்போது தியாகராஜன் நஞ்சை வயலில் ரத்த வெள்ளத்தில் இறந்துகிடந்தார் என்றும், அவருடைய கழுத்து வெட்டுப்பட்டு தொங்கியபடியும், இடது கால் எலும்புக்கு கீழ் 3 வெட்டுக்காயமும், இடது தோள் பட்டையில் வெட்டுகாயமும், வலது விலாவின் கீழ் வெட்டுகாயமும், வலது சூத்தாம்பட்டையில் வெட்டு காயமும், வலது முதுகில் வெட்டுகாயமும், வலது முன் கையில் வெட்டு காயமும், வலது கெண்டை கையில் வெட்டுகாயமும், வலது மணிகட்டில் வெட்டு காயமும், இடது கை சுண்டுவிரல் வெட்டி தொங்கிய நிலையில் பலத்த காயம் பட்டு இறந்துகிடந்தார் என்று மற்ற எல்லா நபர்களும் அங்கு கூடிவிட்டார்கள் என்று சொல்லிவிட்டு, எதிரிகள் கேட்டு கொண்டதன் அவர்களை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக தற்போது எதுவும் தெரியாது என்றும் சம்பவத்தின் போது நான் வெளிநாட்டில் இருந்தேன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)

இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure
**IN THE COURT OF SESSIONS JUDGE,**
**NAGAPATTINAM.**
**Sessions Case No. 55/2015**

**Deposition of Witness for Prosecution : P.W. 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகராஜன் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 18.08.2023

**<u>முதல் விசாரணை</u>**

நான் தென்னம்புலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். தென்னம்புலம் கிராமத்தில் முன்னால் ஊர் மன்ற தலைவராக இருந்து இறந்துபோன தியாகராஜனை தெரியுமா என்றால் தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். இறந்துபோன தியாகராஜன் எப்படி இறந்தார், எப்போது இறந்தார் என்பது பற்றி தெரியுமா என்றால் எனது பிள்ளைக்கு பாம்பு கடித்தது நான் ஆஸ்பத்திரியில் இருந்தேன் அதனால் வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. என்னை வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் இல்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றாலும், அவ்வாறு விசாரிக்கும்போது கடந்த 16.02.2007-ம் தேதி இரவு என் வீட்டில் இருந்தேன் என்றும், அப்போது இரவு 07.00 மணிக்கு தியாகராஜன் வீட்டின் முன்பு ரோட்டில் 3 கார் நின்றது என்றும், நான் யாராவது கட்சிகாரர்கள் வந்திருப்பார்கள் என்று இருந்தேன் என்றும், பிறகு தியாகராஜன் வீட்டின் தியாகராஜன் மனைவி வசந்தா அவர் மகன் அஜய் கணேஷ், அவர் அம்மா வள்ளி அலறல் சத்தம் போட்டார்கள் என்றும், நான் சத்தம் கேட்டு அவர்கள் வீட்டு வாசல் வழியாக போனேன் என்றும், அப்போது

அங்கு நின்ற 3 கார்களில் கையில் அரிவாள், கத்திகளுடன் எனக்கு தெரிந்த தென்னம்புலம் கலை நகரில் வசிக்கும் ராஜசிம்மன், சுந்தர், செல்வம், அய்யப்பன், மொட்டபிள்ளை என்கிற சக்திதாசன், பாபு மற்றும் வாய்மேடு கண்ணன், பஞ்சநதிக்குளம் ஆனந்த், கத்திரிபுலம் கார்த்திக், கரியாப்பட்டினம் வீர எழிலன், தகட்டூர் சுந்தர், விளக்குடி சக்கரவர்த்தி ஆகியோர் அந்த காரில் வேகமாக ஏறிப் போய் விட்டார்கள் என்றும், பின்பு தியாகராஜன் வீட்டின் கொல்லைபக்கம் போய் கை லைட் வெளிச்சத்தில் பார்த்தபோது, தியாகராஜனின் மனைவி வசந்தா, அஜய் கணேஷ், வள்ளி ஆகியோர் அழுது கொண்டு இருந்தார்கள் என்றும், என்னை பார்த்தபடி அவர்கள் ராஜசிம்மன் மற்றும் அவர்களுடன் வந்த ஆட்கள் பெயர்களை சொல்லி தனது கணவரை வெட்டி கொலை செய்துவிட்டு, அரிவாள் கத்திகளுடன் ஓடிவிட்டார்கள் என்றும், நான் பார்க்கும்போது தியாகராஜன் நஞ்சை வயலில் ரத்த வெள்ளத்தில் இறந்துகிடந்தார் என்றும், அவருடைய கழுத்து வெட்டுப்பட்டு தொங்கியபடியும், இடது கால் எலும்புக்கு கீழ் 3 வெட்டுக்காயமும், இடது தோள் பட்டையில் வெட்டுகாயமும், வலது விலாவின் கீழ் வெட்டுகாயமும், வலது சூத்தாம்பட்டையில் வெட்டு காயமும், வலது முதுகில் வெட்டுகாயமும், வலது முன் கையில் வெட்டு காயமும், வலது கெண்டை கையில் வெட்டுகாயமும், வலது மணிகட்டில் வெட்டு காயமும், இடது கை சுண்டுவிரல் வெட்டி தொங்கிய நிலையில் பலத்த காயம் பட்டு இறந்துகிடந்தார் என்று மற்ற எல்லா நபர்களும் அங்கு கூடிவிட்டார்கள் என்று சொல்லிவிட்டு, எதிரிகள் கேட்டு கொண்டதன் அவர்களை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக தற்போது எதுவும் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>

இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.